# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS.No. 227/2022 நாள்.12.06.2025

## PW 1- கீதா க/பெ. பத்மநாபன்

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணைக்கு உட்படுத்தபடாததால் 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது**

**2ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

வீடு, இடம், பேங்க் லாக்கரில் உள்ள நகை மற்றும் பணம் ஆகியவற்றிகாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வங்கியில் எனது தகப்பனாருக்கு சேர வேண்டிய பணத்தை காட்ட பாஸ்புக் தாக்கல் செய்துள்ளேன். என் தகப்பனார் BSNL அலுவலகத்தில் வேலை பார்த்தார், அந்த அலுவலகத்தில் ஆப்பரேட்டராகவும் இருந்து வேலை பார்த்து சீனியர் க்ளர்க்காக பதவி உயர்வு பெற்றார். எனது தகப்பனாருக்கு இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு பெண்கள் வாரிசு ஆவார்கள். 2ஆம் பிரதிவாரி டெல்லியில் சந்தோஷ் டென்டல் மருத்துவமனையில் வேலை பார்க்கிறார். அவருக்கு நல்ல வருமானம் உள்ளது. எனது மற்றொரு சகோதரர் வெங்கட்ராமன் சென்னையில் IT யில் வேலை பார்க்கிறார். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்திலேயே எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது தகப்பனாரின் வசதிக்கு ஏற்ப எங்களுக்கு சீர் செய்து திருமணம் முடித்து கொடுத்தார் என்றால் சரிதான், எனது தாயார் வேலைக்கு செல்லவில்லை. எனது தகப்பனாரின் வருமானத்தை வைத்துதான் எனக்கும், எனது சகோரிக்கும் திருமணம் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்த சம்பளத்தை தவிர வேறு வருமானம் கிடையாது. எனக்கும், என் சகோதரிக்கும் திருமணத்தின்போது தலா 15 சவரன் போடப்பட்டது, சகோதரர்களின் திருமணத்தின்போது தலா 5 சவரன் நகை அவர்களுக்கு போடப்பட்டது. அந்த நகைகள் அனைத்தும் என் தகப்பனார் சம்பாத்தியத்தில் வாங்கியது. எனது தகப்பனார் 2014-15 இல் ஒய்வு பெற்றார். எனக்கு முதல் திருமணம் 1998 இல் நடைபெற்றது, எனது கணவர் இறந்துவிட்டார், எனக்கு 3வயது குழந்தை இருந்தது. எனக்கு 2011 இல் மீண்டும் திருமணம் செய்து வைத்தார். எனது சகோதரிக்கு 2003 இல் திருமணம் ஆனது. எனது மூத்த சகோதரருக்கு 2005 இலும், இளைய சகோதரருக்கு 2012லும் திருமணம் நடைபெற்றது. எனது தகப்பனார் ஒய்வு பெறும் வரையில் எங்கள் நால்வரின் படிப்பு மட்டும் திருமணத்திற்கே பெருந்தொகை செலவாகியிருக்கும் என்றால் சரிதான். நான் சொத்துவிபரத்தில் தெரிவித்துள்ள 60 சவரன் நகை எங்கள் நால்வருடைய நகையும்தான். அதில் எனது 2ஆம் பிரதிவாதியின் நகை சுமார் 25 சவரன் நகை இருக்குமா என்றால் இருக்கலாம். இந்த வழக்கில் 2ஆம் பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா 1 ஆம் அயிட்ட சொத்தில் 2ஆம் பிரதிவாதி தனக்குரிய 1/5 பாகம் கோரியுள்ளார் என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. 3ஆம் அயிட்ட சொத்தான

வங்கி கணக்கில் உள்ள தொகையில் 2ஆம் பிரதிவாதிக்கு 1/5 பாகம் இருக்கிறது என்றால் அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.